**நடுவர் நீதிமன்றம், பாப்பிரெட்டிபட்டி**

**முன்னிலை : திரு.ஐ.சம்பத்,B.A.,, MSW., LLB.,**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி**

**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் நாள் வியாழக்கிழமை**

**CC.No. 64/2026**

**C.N.R.No.TNDP130018802025**

அரசு காவல் உதவி ஆய்வாளர்,
அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு,
குற்ற எண்: 459/2025 ...குற்றமுறையீட்டாளர்

**/எதிரி/**

பாரதி க/பெ மாது ...எதிரி

**வழக்கு விபரம்**

<table>
<tr><td>1.</td><td>Name of the Court</td><td colspan="3">Judicial Magistrate, Pappireddipatti</td></tr>
<tr><td>2.</td><td>Name of the Judge</td><td colspan="3">Thiru.I.Sambath,B.A.,MSW,LLB.,</td></tr>
<tr><td>3.</td><td>Date of Judgment</td><td colspan="3">09.07.2026</td></tr>
<tr><td>4.</td><td>Case Number along with CNR Number</td><td colspan="3">CC.No. 64/2026<br>C.N.R.No.TNDP130018802025</td></tr>
<tr><td rowspan="2">5.</td><td rowspan="2">Name of the parties of the case</td><td colspan="3">Sub-Inspector of Police, Harur<br>Cr.No. 459/2025</td></tr>
<tr><td colspan="3">Bharathi W/o Madhu</td></tr>
<tr><td>6.</td><td>Date of Occurence</td><td colspan="3">10.11.2025</td></tr>
<tr><td>7.</td><td>Date of Complaint</td><td colspan="3">10.11.2025</td></tr>
<tr><td>8.</td><td>Date of arrest if any and remand</td><td colspan="3">---</td></tr>
<tr><td>9.</td><td>Period of Remand of the Accused</td><td colspan="3">---</td></tr>
<tr><td>10.</td><td>Date if release on bail</td><td colspan="3">---</td></tr>
<tr><td>11.</td><td>Date of Final Report</td><td colspan="3">10.11.2025</td></tr>
<tr><td>12.</td><td>Date of Committal of the case to court of Sessions</td><td colspan="3">-Nil-</td></tr>
<tr><td>13.</td><td>Date of Questioning of the accused U/s.4(1)(C)TNP Act</td><td colspan="3">25.06.2026</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td rowspan="2">Date of Examination in Chief and cross examination of the witnesses</td><td>Witnesses</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1<br>PW2<br>PW3</td><td>08.07.2026<br>08.07.2026<br>08.07.2026</td><td>08.07.2026<br>08.07.2026<br>08.07.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on Challenge before the Superior courts except routine petitions like petitions U/S. 355 BNSS | -Nil- |
| 16. | Date of Examination of the Accused U/s.351 BNSS | 09.07.2026 |
| 17. | Details of the abscondence of an accused and his appearance / production as the case may be | -Nil- |
| 18. | Grant of Stay by Superior Courts and the results there of | -Nil- |
| 19. | Date of Commencement of Trial | 08.07.2026 |
| 20. | Date of Closure of Trial | 08.07.2026 |
| 21. | Date of Sentence of Order | 09.07.2026 |
| 22. | Date of Service of Copy of Judgment to the Accused | 09.07.2026 |
| 23. | If any delay give Explanation | -Nil- |

இவ்வழக்கானது 20.02.2026–ம் தேதி அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக 09.07.2026 –ம் தேதியன்று வந்தபோது குற்றமுறையீட்டாளர் தரப்பில் அரசு வழக்கறிஞர் நிலை–1 செல்வி.V.சண்முகபிரியா,பி.ஏ.,எம்.எல்., முன்னிலையிலும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திருவாளர் Y.ஹரிஷ் ஆகியோர்களின் முன்னிலையில் வழக்கு ஆவணங்கள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்த பின்னரும் இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்த பின்னரும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

1. கடந்த 10.11.2025–ம் தேதி 13.00 மணிக்கு பொம்மிடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பி.பள்ளிப்பட்டி கிராமத்தில் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்த போது எதிரி பாரதி தனது வீட்டின் பின்புறம் சுமார் 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி–26 பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்த எதிரியின் செயலானது சட்டப்பிரிவு 4(1)(C) ன் படி தண்டிக்கதக்க

குற்றம் என்று அரூர் காவல் உதவி ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இந்நீதிமன்றம் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்து CC.No.64/2026 என 20.02.2026–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டவுடன் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரி இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் ஆஜரானவுடன் அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு இலவசமாக BNSS பிரிவு 230 ன் கீழ் வழங்கப்பட்டு குற்றச்சாட்டுகள் வனைவதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

3.எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டபின் வழக்கு ஆவணங்களை கவனத்துடன் பரீசிலனை செய்தபோது எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருந்தபடியால் எதிரி மீது தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் பிரிவு 4(1)(C)–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றங்களின் தன்மையை எதிரிக்கு படித்து விளக்கி கூறியபோது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என கோரியதால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க ஒத்தி வைக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. அரசு தரப்பு சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u>**

(i) **அ.சா.1 வெங்கடாசலம் (தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 10.11.2025–ம் தேதி பகல் 01.00 மணியளவில் தான் அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் அவர்களது தலைமையில் தானும் தன்னுடன் தலைமை காவலர் சத்யா ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக B.பள்ளிப்பட்டி கிராமத்தின் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி

வீட்டின் பின்புறம் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Express Brandy-26 பாட்டில்களை வைத்திருந்தார் என்றும், எதிரி தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த தலைமை காவலர் சத்யா முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy-26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் தலைமை காவலர் சத்யா அவர்களும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றி காவல் நிலையம் எடுத்து சென்றார் என்றும், அவருக்கு உதவியாக சென்றோம் என்றும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) **அ.சா.2 சத்யா (தலைமை காவலர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 10.11.2025 -ம் தேதி பகல் 01.00 மணியளவில் தான் அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் பணியில் இருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் அவர்களது தலைமையில் தானும் தன்னுடன் தலைமை காவலர் அ.சா.1 ஆகியோருடன் காவல் உதவி ஆய்வாளர் கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக B.பள்ளிப்பட்டி கிராமத்தின் அருகே கண்காணித்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி வீட்டின் பின்புறம் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்தபோது 180 ML அளவு கொண்ட Express Brandy-26 பாட்டில்களை வைத்திருந்தார் என்றும், எதிரி தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும்,

எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்த இடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த தலைமை காவலர் அ.சா.1 முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy−26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார் என்றும், கைப்பற்றுதல் மகஜரில் தானும் தலைமை காவலர் அ.சா.1 அவர்களும் கையொப்பம் செய்தோம் என்றும், தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் கைப்பற்றபட்ட வழக்கு சொத்துக்களை காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றி காவல் நிலையம் எடுத்துச் சென்றார் என்றும், அவருக்கு உதவியாக சென்றோம் என்றும், பின்னர் எதிரியை நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்தார் என்றும், காவல் உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) **அ.சா.3 புஷ்பாகரன் (காவல் உதவி ஆய்வாளர்)** தனது சாட்சியத்தில் தான் தற்போது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 10.11.2025 ம் தேதி தான் பணியில் இருந்தபோது அன்றைய தினம் பகல் 13.00 மணியளவில் தனது தலைமையில் தானும் தன்னுடன் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோருடன் தனக்கு கிடைத்த தகவலின்பேரில் மது விலக்கு குற்றம் தடுப்பு சம்பந்தமாக B.பள்ளிப்பட்டி கிராமத்தில் கண்காணித்து கொண்டிருந்தபோது எதிரி வீட்டின் பின்புறம் சந்தேகத்தின்பேரில் சோதனை செய்தபோது எதிரி 180 ML அளவு கொண்ட Express Brandy−26 பாட்டில்கள் விற்பனைக்காக வைத்திருந்தார் என்றும், தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றவரை போலிஸ் பார்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொதுமக்களிடம் சில்லரையில் பாட்டில்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை தான் அந்த இடத்திலேயே கைது செய்தேன் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தன்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் எதிரியிடம் இருந்து 180 ML அளவு கொண்ட Express Brandy−26 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும், கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், கைப்பற்றப்பட்ட மது பாட்டில்கள் மற்றும் எதிரியுடன் நிலையம் வந்தடைந்தேன் என்றும்,

எதிரி மீது அரூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவு குற்ற எண் 459/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) TNP ACT படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பின்னர் சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை தர்மபுரி மாவட்ட மதுவிலக்கு ஆயத்தீர்வை அலுவலரான ஆணையர் உத்தரவின் பேரில் வழக்கு சொத்துகளை நிலைய இருப்பில் வைத்து பின்னர் இரண்டு தனிநபர் சாட்சிகள் மற்றும் மாவட்ட மேலாளர் டாஸ்மார்க் அவர்களின் முன்னிலையில் கொட்டி அழிக்கப்பட்டது என்றும், எதிரியை நிலைய பிணையில் விடுவித்தேன் என்றும், சாட்சிகள் 1 மற்றும் 2 ஐ தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், அத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து 10.11.2025–ம் தேதி எதிரிக்கு எதிராக 4(1)(C) TNP ACT படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சாட்சிய விவரங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(b)–ன் படி வினவியபோது எதிரி பொய்சாட்சி என்றும், இந்த வழக்கு பற்றி ஏதவாது சொல்லவேண்டுமா என்று வினவியபோது பொய் வழக்கு என்றும், அவர்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென்றும் கூறினார்கள்.

7. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றும், எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், அரசுத்தரப்பில் இந்த வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து விடுதலை செய்யவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்?**

**9. தீர்வு**

(i) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.1 மற்றும் அ.சா.2 தங்களது சாட்சியத்தில் கடந்த 10.11.2025–ம் தேதி காலை 01.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் புஷ்பாகரன் அவர்களது தலைமையில்

பி.பள்ளிபட்டி கிராமத்தில் மதுவிலக்கு ரோந்து பணி மேற்கொண்ட போது எதிரி பாரதி என்பவர் தனது வீட்டின் பின்புறம் 180 எம்.எல் அளவு கொண்ட எக்ஸ்பிரஸ் பிராந்தி–26 பாட்டில்கள் இருந்தன என்றும், எதிரி தங்களை கண்டவுடன் தப்பியோட முயன்றார் என்றும், எதிரியை போலிஸ் பார்ட்டி உதவியுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் அரசு மதுபானத்தை மொத்தமாக வாங்கி வந்து பொது மக்களிடம் சில்லரையில் அதிக விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார் என்றும், எதிரியை காவல் உதவி ஆய்வாளர் அந்தயிடத்திலேயே கைது செய்தார் என்றும், மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் தாங்கள் இருவரும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்தோம் என்றும், மேலும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை காவல் உதவி ஆய்வாளர் உயர் அதிகாரியின் உத்தரவின் பேரில் அந்த இடத்திலேயே கொட்டி அழித்தோம் என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் தங்களது குறுக்கு விசாரணையில் கைப்பற்றிய மதுபாட்டில்கள் மூடி திறந்திருந்தது என்றும், அதில் 180 எம்எல் இருந்தது என்றும், கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து எழுதிக்கொண்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றும், சம்பவயிடத்திற்கும் அரசு மதுபான கடைக்கும் 5 கிலோமீட்டர் இருக்கும் என்றும், சம்பவநேரம் அரசு மதுபான கடை திறந்திருக்கும் நேரம் என்பதால் எதிரி மதுபானங்களை சில்லரையில் விற்பனை செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்கள்.

(ii) இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள புஷ்பாகரன் என்பவர் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி ஆவார். அ.சா.3 இவ்வழக்கில் தான் செய்த புலன் விசாரணையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் தனது குறுக்கு விசாரணையில் சம்பவயிடத்திற்கும் அரசு மதுபான கடைக்கும் எவ்வளவு தூரம் என்றால் அதை என்னால் கூறயிலாது என்றும், சம்பவயிடம் மக்கள் அதிகம் கூடும் இடம் என்றால் சரியல்ல என்றும், அந்த சமயத்தில் அங்கு யாருமில்லை என்றும், சம்பவயிடம் குறைந்த குடியிருப்புகள் கொண்ட ஒரு பகுதியாகும் என்றும், இந்த வழக்கில் தனிநபர் சாட்சியாக யாரையும் சேர்க்கவில்லை என்றும், தனிநபர் சாட்சிகள் யாரும் சம்பவயிடத்தில் இல்லாததால் சேர்க்கவில்லை என்றும், சம்பவ

நேரம் பகல் 1 மணி என்பதால் தனிநபர்கள் யாரும் இல்லை என்று பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல என்றும், கைப்பற்றுதல் மகஜர் சம்பவயிடத்தில் வைத்து எழுதிக்கொண்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றும், சம்பவயிடத்தில் மதுபானங்களை கைப்பற்றும் போது போட்டோ வீடியோ எடுக்கவில்லை என்றும், சம்பவநேரம் அரசு மதுபான கடைதிறந்திருக்கும் நேரம் என்பதால் எதிரி மதுபானங்களை சில்லரையில் விற்பனை செய்ய வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல என்றும் கூறி சாட்சியமளித்துள்ளார்.

(iii) மேற்கண்ட அ.சா.1 அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களை கூர்ந்து கவனிக்கும் போது கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை பரிசோதனைக்காக அனுப்பி அதற்கான ஆய்வறிக்கை எதுவும் பெறவில்லை என்பதும், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பதும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை அழிப்பதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து எழுத்து பூர்வமான உத்தரவு எதையும் பெறவில்லை என்பதும், தமிழ்நாடு மதுவிலக்க சட்டம் மற்றும் அதன் விதிகள் முறையாக பின்பற்றப்படவில்லை என்பதும், மேற்கண்ட அ.சா.1 அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களின் மூலம் தெளிவாகிறது. மேலும் சம்பவ நேரம் அரசு மதுபான கடை திறந்திருக்கும் நேரம் என்பதால் எதிரி மதுபாட்டில்களை அதிக விலைக்கு விற்பதற்கான வாய்ப்பே இல்லை என்று கூறிய எதிரிதரப்பு வழக்கறிஞரின் வாதம் ஏற்றுக்கொள்ள கூடிய வாதமாகவே கருதப்படுகிறது. எனவே எதிரி எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ பெறாமல் மதுபாட்டில்களை கள்ளதனமாக விற்பதற்காக வைத்திருந்ததாக சொல்லப்படும் குற்றச்சாட்டை பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10.**இறுதியாக,** எதிரி பாரதி மீது சுமத்தப்பட்ட தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)–ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 4(1)(C)–ன் படியான குற்றச்சாட்டுக்களிலிருந்து இந்நீதிமன்றம் BNSS பிரிவு 271 (1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

11. இந்த வழக்கில் சொத்துக்கள் ஏதும் கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை. எனவே சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

12. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 09–ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.07.09 16:34:32 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

அ.சா.1 – வெங்கடாசலம் (தலைமை காவலர்)

அ.சா.2 – சத்யா (தலைமை காவலர்)

அ.சா.3 – புஷ்பாகரன் ( காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :**

**Judicial Form. 68**

| **Sl.No.** | **Description to the exhibits and its date** | **Date when the exhibit was filed in the case** | **How Marked** | **By whom filed** | **Remarks** |
|---|---|---|---|---|---|
| 1) | கைப்பற்றுதல் மகஜர் | 08.07.2026 | அ.த.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2) | முதல் தகவல் அறிக்கை | 08.07.2026 | அ.த.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |

**அரசு தரப்பு சான்று பொருள்**:– இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**:– இல்லை

I SAMBATH Digitally signed by I SAMBATH Date: 2026.07.09 16:34:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பாப்பிரெட்டிப்பட்டி.**

**குறிப்பு** :

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.